# அன்பான தேவ கிருபை

**ஜெபம்:** "பரலோகத்தில் இருக்கும் எங்கள் தந்தையே. உமது அன்பான கிருபையை குழந்தைகள் அறிந்து கொள்ள இந்தப் பாடத்தின் மூலம் உதவும் ஐயா!"

உங்கள் குழந்தைகளின் சமுதாயப் பின்னணிக்கும், வட்டார பழக்க வழக்கங்களுக்கும் பொருந்தும் நடவடிக்கைகளைத் தேர்ந்து கொள்ளவும்.

**1. கெட்ட குமாரனின் கதையை வாசிக்கவும் அல்லது மனப்பாடமாகக் கூறவும், லூக்கா 15:11-32**



முடியுமானால் ஒரு பெரிய பிள்ளையை மற்றவர்களுக்கு இக் கதையைக் கூறும்படி ஆயத்தப்படுத்தவும்

தன் தந்தை மன்னித்தபோது எவ்வாறு ஓர் இளம் வாலிபன் ஆச்சரியம் அடைந்தான் என்பதை எடுத்துக் காட்டுவதே நோக்கம் என்று இக் கதையைக் கூறுமுன் விளக்கவும். அந்த மகன் தன் தந்தையிடம் மோசமாக நடந்து கொண்டான்.

கதையைக் கூறிய பிறகு பின்வரும் கேள்விகளைக் கேட்கவும்:

- எதைக் கொடுக்குமாறு மகன் தந்தையிடம் கேட்டான்?
- தனது சொத்தை மகன் என்ன செய்தான்?
- எல்லா சொத்தும் கரைந்து போன பிறகு மகனுக்கு என்ன நேர்ந்தது?
- தன் தந்தையிடம் மகன் என்ன சொல்ல விரும்பினான்?
- தகப்பன் தன் மகனை எவ்வாறு நடத்தினார்? அண்ணன், தம்பியைக் குறித்து எவ்வாறு எண்ணினான்?



- மூத்த சகோதரனுக்கு தந்தை எவ்வாறு விளக்கம் அளித்தார்?
- கெட்ட குமாரன் சாப்பாடு போட்ட பன்றிகளை வரையவும்
- பெரிய பிள்ளைகள் வரைவதற்கு சிறுவர்கள் உதவவும்

- பெரியவர்களுக்கு விளக்கவும். தேவனிடம் இருந்து நாம் எவ்வளவு தொலைவிற்கு விலகிச் சென்றாலும் தேவ கிருபை நம்மை வந்தடைகிறது என்பதையே பன்றிகள் சுட்டிக்காட்டுகின்றன. நாம் எவ்வளவு மோசமாக பாவம் செய்திருந்தாலும், நமது பாவத்தை விட்டு விலகி, அவரிடம் திரும்பி வந்து, அவரது மன்னிப்பைக் கோரும்போது அவர் நம்மை மன்னிக்கிறார்.

## 2. ìகெட்ட குமாரன்î கதையை ஒத்திகை பார்த்து பெரியவர்களுக்கு நடித்துக்காட்டவும்

- ஆராதனையை வழிநடத்தும் தலைவர்களுடன் கலந்து பேசி இந்த நாடகத்தைப் பிள்ளைகள் பெரியவர்களுக்கு நடத்திக் காட்ட ஏற்பாடு செய்யுங்கள்.
- கதையைக் கூறுபவர் கதையைக் கூற, நடிப்பவர்கள் அந்த வேதாகமக் கதையின பாத்திரங்கள் பேசுவதைப் பேசி நடிக்கவும்.
- நாடகம் முடிந்த பிறகு பெரியவர்களிடம் கேட்க வேண்டிய கேள்விகளைப் பிள்ளைகள் தயாரிக்கட்டும்
- தங்கள் பாகத்தை நன்கு அறிந்து பேசிப் பழகும் வரை ஒத்திகை எடுக்கவும்.

| | |
|---|---|
| கதை கூறுபவர் | நாடகப் பாத்திரங்கள் பேசாத பகுதிகளை வாசிக்க வேண்டும். நடிப்பவர்கள் நடித்து, தங்கள் பாகத்தைப் பேச, இடைவெளி விட்டு கதை கூறவேண்டும். |
| கெட்ட குமாரன் | இளைய சகோதரனின் வார்த்தைகளைப் பேசவும். என்ன நடந்தது என்பதை விளக்க நடிப்பு, வார்த்தைகளை சேர்த்துக் கொள்ளவும். |
| தந்தை | தந்தையின் பேச்சும் செயல்களும் |
| பெரிய மகன் | அண்ணனின் பேச்சும் செயலும் |
| வேலைக்காரன் | வேலைக்காரனின் பேச்சும் செயலும். கொழுத்த ஆட்டைப் பிடித்துக் கொல்லுவதையும் நடித்துக் காட்டலாம் |
| கன்றுக்குட்டி | குனிந்து நிற்கும் இரண்டு பையன்கள் மீது போர்வையால் மூடி கன்றைப் போல நடிக்க வைத்தால் சிரிப்பாக இருக்கும் |
| மோசமான நண்பர்கள | போதுமான குழந்தைகள் இருந்தால் தூர தேசத்தில் இளைய மகனோடு சேர்ந்து சொத்தை வீணடித்த நண்பர்களாக நடிக்க வைக்கலாம். |



3. **கவிதை (சங். 103, வசனங்கள் 2,3,4 & 11)**

- இரண்டு பிள்ளைகள் இந்த இரண்டு பகுதிகளையும் கூறட்டும்
- அவர்கள் பெரியவர்களுக்கு இந்தக் கவிதையைக் கூறலாம்.

பகுதி - 1

என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி
அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே
அவர் உன் அக்கிரமங்களை எல்லாம் மன்னித்து
உன் நோய்களை எல்லாம் குணமாக்கி

பகுதி - 2

உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு
உன்னை கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டுகிறார்.
தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல
கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்.

4. **மனப்பாட வசனம்:** எபே. 2:8-9

5. **ஜெபம்:**

“கர்த்தாவே, எங்கள் வாழ்க்கை முற்றிலுமாக பாவம் நிறைந்ததாக இருக்கிறது. நீர் இல்லாவிட்டால் நாங்கள் அழிந்து போவோம்.

“நாங்கள் செய்த கெட்ட காரியங்களை மன்னித்ததற்காய் நன்றி.

“உம்மை நோக்கி திரும்பிய போது எங்களை அழைத்துக் கொண்டதற்கு நன்றி.

“நாங்கள் உம்மிடமாக திரும்பும்போது நீர் மகிழ்ச்சி அடைவதால் நாங்கள் களிகூருகிறோம்.

“பாவிகள் உம்மிடம் திரும்பி வரும்போது களிகூரும்படி எங்களுக்கு உதவும்.

“நாங்கள் இதை அதிஅற்புதமான இயேசுவின் நாமத்தினால் கேட்கிறோம். ஆமென்.”

Download Paul-Timothy studies freely from www.Paul-Timothy.net